பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 04 ஞாயிற்றுக்கிழமை 16.02.2025 கதிர் 100

# புதிய அரசமைப்பில் அனைவருக்கும் சம உரிமை, தனித்துவ அடையாளம்

## வட்டுக்கோட்டையில் பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**அனைவருடனும் கலந்துரையாடி புதிய அரசமைப்பை உருவாக்குவது எமது பொறுப்பாகும். நாட்டினுள் அனைவருக்கும் சமத்துவமான உரிமைகள் கிடைக்கவும் அவர்களின் தனித்துவ அடையாளங்களைப் பேணவும் வழிசமைப்போம் என்று பிரதமர் ஹரணிதெரிவித்துள்ளார்.**



அவர் நேற்று வட்டுக்கோட்டையில் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் விவகாரத்தைச் சுற்றி தொடர்ந்து எழுந்துவரும் நிலமைகள் நிர்வாகத்தை ஆட்டி வைக்கின்றன. மாணவர்கள் மீதான ஒழுக்காற்றுப் பிரச்சினையை போதைப் பொருள் பயன்பாட்டுப் பிரச்சினையாகத் திசை திருப்பி மக்களையும் நம்பவைத்து ☞ 2

## யானையில் மீண்டும் ஐ.தே.க. போட்டி

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு, கண்டி, காலி மற்றும் நுவரெலியா ஆகிய நகர சபைகளுக்கு 'யானை' சின்னத்தின் கீழ் மட்டுமே போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது. ☞ 8

## வெப்பத்தால் தீங்கு

இந்த நாட்களில் நிலவும் மிகவும் வெப்பமான வானிலை உள் உறுப்புகள் மற்றும் சருமம் இரண்டுக்கும் மிகவும் தீங்குவிளைவிப்பதாகஇருக்குமெனலேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் சிறுவர் மருத்துவ நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில் உடல் அதிகமாக வியர்த்து, வியர்வை கொப்புளங்கள், அரிக்கும் தோலழற்சி, தடிப்புகள் போன்ற தோல்நோய்கள் அடிக்கடி ஏற்படும் ☞ 8

## பிரதமரின் மக்கள் சந்திப்பில் பதற்றம்

வலி. வடக்கில் படையினர் வசம் உள்ள தமது காணிகள் எப்போது விடுவிக்கப்படும் என்று பிரதமர் ஹரினியிடம் கேள்வி எழுப்பிய காணி உரிமையாளர் ஒருவர் பிரதமரின் பாதுகாவலர்களால் பலவந்தமாக அங்கிருந்து அகற்றப்பட்டதால் பிரதமரின் ஏழாலை மக்கள் சந்திப்பில் பதற்றம் ஏற்பட்டது.

பிரதமர் பங்கேற்ற தேசிய மக்கள் சக்தியின் உடுவில் தொகுதி மக்கள் சந்திப்பு ஏழாலை ஏழு கோயிலடியில் நேற்று மாலை நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய பிரதமர் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவாகரம் உள்ளிட்ட தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக எதுவும் பேசவில்லை. இந்த நிலையில், பிரதமர் உரையாற்றிவிட்டு மேடையில் இருந்து இறங்கி மக்களை நெருங்கிச் சென்று சந்தித்துப் பேசினார்.

அப்போது அங்கிருந்த வலி. வடக்கு காணி உரிமையாளர் ஒருவர், பலாலி பகுதியில் காணிகள் விடுவிக்கப்படாமல் இருப்பது தொடர்பான தனது ஆதங்கத்தைப் பிரதமரிடம் நேரடியாகத் தெரிவித்தார். எனினும் அவருக்குப் பதிலளிக்காமல் பிரதமர் மற்றவர்களுடன் பேச முற்பட்டபோது அந்தக் காணி உரிமையாளர் ''உங்கள் அரசியலுக்காக எங்களைப் பயன்படுத்தவேண்டாம்" - என்று தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் உரக்கக் கத்தினார்.

இதனால் பரபரப்பாகிப் பதற்றமடைந்த பிரதமரின் பாதுகாவலர்கள் உடனடியாக அந்தக் காணி உரிமையாளரை அங்கிருந்து அகற்றினர். அதனைப் பதிவு செய்ய முற்பட்ட செய்தியாளர்களுடனும் முரண்பட்டனர். இதனால் அங்கு சிறிது நேரம் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

நிலமை சாதகமற்றதாக மாறியதை அடுத்து பிரதமர் ஹரிணி அவரது பாதுகாவலர்களால் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்.

## உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் நாளை நடக்கும்

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாளை நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தொடர்பான சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வியாக்கியாளமளித்துள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பின் சாராம்சத்தை சபாநாயகர் ஜகத் ☞ 8

## இளங்குமரன் எம்.பி. வாகன விபத்தில் காயம்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் எம்.பி பயணித்த வாகனம் விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி - தனக்கிளப்பு பகுதியில் இந்த விபத்து நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வயலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் நிலையில், பிரதமர் ☞ 8

## மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு ஒருபோதுமே அனுமதிக்க முடியாது

### பொது அமைப்புக்கள் எதிர்ப்பு

மன்னார் தீவில் மக்களின் வாழ்வியலும், எதிர்கால நலனையும் பாதிக்கின்ற கணிய மணல் அகழ்வுக்கு ஒரு போதும் அனுமதி வழங்க முடியாது எனவும் கனிய மணல் அகழ்வுக்கு சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையை வழங்க முன்னெடுக்கவுள்ள களப் பயணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என மன்னார் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர்கள் இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் தீவில் மூன்று திட்டங்கள் அரசினால் ☞ 8

## புதுப்பிக்கத்த மின் உற்பத்தி ஆற்றலை வரையறுக்க குழுவை நியமித்தது அரசு

### நிலக்கரி, டீசல் மாபியாக்களுக்கான ஆதரவு எனக்குற்றஞ்சாட்டுகிறார் சம்பிக்க ரணவக்க

நாட்டில் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலமான மின் உற்பத்திகளை வரையறுப்பதற்காக இலங்கை மின்சாரசபையின் சிரேஷ்ட பொறியியலாளர்களை உள்ளடக்கி விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மீண்டும் நிலக்கரி மற்றும் டீசல் மாபியாக்களை தலைதூக்கச் செய்யவே ஆளும்தரப்பு இவ்வாறானதொரு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக ☞ 2

## இந்தியாவிலிருந்து குற்றவாளிகளை இலங்கைக்கு அழைக்க நடவடிக்கை

பல்வேறு குற்றங்களை செய்து தற்போது இந்தியாவில் தலைமறைவாகியுள்ள குற்றவாளிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சர் புத்திகமனதுங்க தெரிவித்தார்.

அவர் நேற்று கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடத்தில் ☞ 2

## புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் போராடும் பட்டதாரிகள் முறைப்பாடு

### அப்படிச் செய்ய முடியாது என்கிறார் அமைச்சர்

போராட்டத்தில் ஈடுபடுகின்றபோது புலனாய்வுப் பிரிவு மற்றும் அரச தரப்பினால் தமக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக அரச தொழிலற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் சசிகரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நடைபெற்ற போராட்டத்தின்போது செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபடுகின்றபோது ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களால் பல பட்டதாரிகள் போராட்டத்திலிருந்து ஒதுங்குகின்றனர். இருப்பினும் எமக்கான வேலைக்காக நாங்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம்.

தொலைபேசி அழைப்புகள் ஊடாக மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றது. நாங்கள் ஆளும்தரப்புக்கு எதிராகப் போராடவில்லை. நாங்களும் இந்த ஆளும்தரப்பை வரவேற்கிறோம். அரசுக்கு எதிராகச் செயற்படவேண்டாம், போராட்டம் செய்ய வேண்டாம் என ஒரு தரப்பினர் தடுக்கின்றனர் - என்றார்.

பட்டதாரிகளின் இந்த முறைப்பாடு தொடர்பில் செய்தியாளர்கள் அமைச்சர் சந்திரசேகரனிடம் கேள்வி எழுப்பினர், பதிலளித்த அவர் ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

சிலர் ஆடிய ஆட்டத்திற்கு வளைந்துகொடுக்கப் போய், இன்று அவமானப்பட்டு நிற்பவர் துணைவேந்தர்தான்.

பேராசிரியர் ரகுராம் பதவி விலகிப் போட்ட போதைப்பொருள் நாடகத்தினை அடுத்து, அவரை மீண்டும் பதவியேற்க வைப்பதற்காக நடந்த பேச்சுக்களில் சிறீகஜன் தன்னைப் பற்றி சமூக ஊடகங்களில் தெரிவித்த கருத்துக்களுக்காக அவர் தண்டிக்கப்படவேண்டும் என்பதை முக்கியமான நிபந்தனையாக வைத்திருந்தார் என்று தெரிகிறது. துணைவேந்தர் தரப்பு வட்டாரங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இதையடுத்தே அவரது கோரிக்கையின்படி மாணவருக்கு பல்கலைக்கழகத்திற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டது என்றும் அவை தெரிவிக்கின்றன.

பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போன்று, ஏற்கனவே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட மாணவர்களின் நியாயமான கோரிக்கைகள், நிலைப்பாடுகளுக்கு ஆதரவாக நின்ற சிவகஜன் மீதே கலைப்பீடாதிபதியின் நிர்ப்பந்தத்தால் துணைவேந்தர் நடவடிக்கை எடுக்கப்போக, வசதியாக அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில் பல்கலைக்கழகத்தின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிராக இடைக்காலத்தடையும், பின்னர் நிவாரணமும் கேட்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்திலும் பல்கலைக்கலைக்கழக நிர்வாகத்தின் தரப்பில் பெரும் பலவீனங்கள் காணப்படுவதால் மாணவர் கோரும் நிவாரணம் அவருக்கு உனடியாகவே கிடைக்கும் வாய்ப்புக்களே அதிகம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதையடுத்து அவசர அவசரமாக நேற்று சிவகஜனுக்கு வழங்கப்பட்ட வகுப்புத் தடையை நீக்கி உத்தரவிட்டிருக்கிறார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறீசற்குணராசா. நேற்று சனிக்கிழமை. ஆனாலும் வகுப்புத் தடை நீக்க கடிதம் உடனடியாக பல்கலைக்கழத்தின் அனைத்துத் துறைசார் தரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அந்தக் கடிதத்தை வந்து உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறும் மாணவனுக்கு நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. ''இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை. திங்கட்கிழமைகடிதத்தைப் பெற்றுக்கொள்கின்றேனே" என மாணவனால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, "இல்லையில்லை இரவு எத்தனை மணியானாலும் வந்து கடிதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்" என்று அறிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்தத் தகவலின் உண்மையைத் தன்மையை முழுமையாக உறுதிப்படுத்த முடியவில்லையாயினும் நேற்றிரவு இந்தக் கதைகள் உலாவந்தபடியிருந்தன.

ஒரு வழக்கைக் கண்டு எவ்வளவு பதறிப்போயிருந்தால் இப்படி அவசரப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்? நிர்வாகத்தில் இருக்கும்போது எடுப்பார் கைப்பிள்ளைபோன்று செயற்படாமல் சட்டதிட்டங்களுக்கும், விதிகளுக்கும் ஏற்ப முறையாகச் செயற்பட்டிருந்தால் இந்த அவலம் வந்திருக்காது. யாருடையதோ அரசியல்தேவைகளுக்கும்கனவுகளுக்கமாக தன்னைக் கேவலப்படுத்திக்கொண்டுள்ளது பல்கலைக்கழகம்.

மாணவனின் வகுப்புத் தடை நீக்கப்பட்டிருப்பதால் தொடரப்பட்ட வழக்கு முடிவுக்கு வந்துவிடும் என்கிற எதிர்பார்ப்பு பல்கலைக்கழகநிர்வாகத்திற்கு இருக்கக்கூடும். ஆனால், இந்த வகுப்புத்தடை கைவாங்கல் கடிதம், பல்கலைக்கழக நிர்வாகம் தவறிழைத்தது என்பதை உறுதிப்படுத்தும் ஒரு ஆவணமாக வழக்குக்குப் பலம் சேர்க்கப்போவதுடன், அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, மாணவன் மீதான விசாரணை தொடரும் என்ற வசனம் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்வதைக் குறிப்பதால் வழக்கும் தொடர்வதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

வகுப்புத் தடை நீக்கத்தால் வழக்கைக் கைவிடும் நிலையில் மாணவன் தரப்பும் இல்லை என்று தெரிகிறது. தங்கள் பிரச்சினையைச் சமாளிக்க இப்போது கைவாங்குவது போன்று கைவாங்கிவிட்டு, பின்னர் பழிவாங்கக்கூடும் என்கிற அச்சமே அதற்குக் காரணம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக நாட்டில் உள்ள 25 மாவட்டங்களில் 24 மாவட்டங்களில் வெற்றிபெற்ற பிரதிநிதித்துவங்களுடன் ஆட்சி அமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி என்ற தனியொரு கட்சிக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

76 வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட அரசியலில் இருந்து எமது மக்கள் இம்முறை மாற்றத்தை உருவாக்கியிருக்கின்றார்கள். இதுதான் மிக முக்கியமானதொரு வெற்றியாக உள்ளது.

எமது ஆட்சி மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை உருவாக்குவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதித்துவமாகும். இத்தனை வருடங்களாக இனங்களுக்கு இடையில் எட்டப்படாதிருக்கும் இன ஐக்கியத்தினை இத்தடைவை காணவேண்டும் என்பதே எமது ஒரே நோக்கமாகவுள்ளது.

எமது நாடு பல்வகைமையைக் கொண்டதாகும். அது பரந்துபட்டதாகும். அவ்வாறான நிலையில் மக்கள் ஒவ்வொருவருக்கும் சிறப்பானதொரு வாழ்க்கையை நாட்டிற்குள் வாழ்வதற்கான சமமான உரிமை காணப்படுகின்றது.

அனைவரும் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தும் அதேநேரம், அனைவரும் ஒற்றுமையாக வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது.

இலங்கை என்பது எமது வீடு. எமது வீட்டுக்குள் பிரச்சினைகள் உள்ளன. எங்குதான் பிரச்சினைகள் இல்லை. எமது வீட்டுக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை நாங்கள்தான் தீர்க்கவேண்டும்.

வடக்கில் உள்ள தயார் ஒருவர் பாடசாலைக்கு தனது பிள்ளையை அனுப்பும்போது எதிர்காலத்தினை சிந்திப்பது போன்றுதான் தென்னிலங்கையில் உள்ள தாயாரும் தனது பிள்ளையின் எதிர்காலத்தினைக் கருதுகின்றார்.

உள்நாட்டு போர் நிறைவுக்கு வந்ததன் பின்னர் முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள். தங்களுடைய அதிகார பலம் வீழும்போது இனவாதத்தினை, மதவாதத்தினை ஏற்படுத்துவார்கள். அதனை மக்கள் தோல்வியடைச் செய்தபோதும் தற்போது இனவாதத்தினை, மதவாத்தினை தூக்கிப் பிடிப்பதற்கு முனைகின்றார்கள்.

அடுத்த ஒருமாதத்துக்குள் அவ்வாறு கூக்குரல் இடுபவர்களின் குரல் முழுமையாக நின்றுவிடும். அதன்பின்னர் எமது எதிர்காலத்தினை நோக்கி அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க முடியும்.

புதிய அரசமைப்பை உருவக்குவது எமது இலக்குகளில் ஒன்றாகும். அந்த அரசமைப்பினை அனைவருடனும், கலந்துரையாடியேஅவர்களின்தீர்மானத்துக்கு அமைவாக முன்னெடுப்போம். அது எமது பொறுப்பாகும் என்றார்.

## புதுப்பிக்கத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கைக்கமைய எதிர்காலத்தில் காற்றாலை மற்றும் சூரிய மின்உற்பத்தி திட்டங்களின் நிலைமை கேள்விக்குறியே. நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்படுவதற்கு முதல் நாள், அதாவது பெப்ரவரி 7 இலங்கை மின்சாரசபையால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை, சூரிய மற்றும் நீர் மின்னுற்பத்திகளை வரையறுப்பது தொடர்பிலேயே அந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களை இவற்றை முற்றாக இல்லாமலாக்குவதற்கான நடவடிக்கைகளையே தற்போது அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. புதிய ஆளும்தரப்பின்கீழ் மீண்டும் நிலக்கரி, டீசல் மாபியாக்கள் தலைதூக்கவுள்ளன. இது மிகவும் கவலைக்குரியதாகும்.

கடந்த காலங்களில் எம்மால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட இந்த மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களே இன்று நாட்டில் பிரதான மின்னுற்பத்தி மூலங்களாகவுள்ளன. இவை அனைத்தையும் சீர் குலைக்கும் வேலைத் திட்டங்களை தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. இதற்காகவே இலங்கை மின்சாரசபையின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் பலரை உள்ளடக்கி இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் கீழ் அதானி மாத்திரமின்றி சகல சர்வதேச முதலீட்டாளர்களும் வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை. கடந்த காலங்களில் மன்னார் காற்றலை மின்உற்பத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு 5 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக அதானி நிறுவனம் முதலீட்டு சபைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு ஏனைய முதலீட்டாளர்களும் சிந்திப்பர்.

எந்தவொரு முதலீட்டாளருக்கும் போட்டித் தன்மை இன்றி வலுசக்தி துறையில் அதிகாரத்தை வழங்க வேண்டிய தேவை கிடையாது. அண்மையில் கூட விலைமனு கோரலின்றி நிறுவனமொன்றுக்கு 50 மொகாவோல்ட் காற்றாலை திட்டம் வழங்கப்பட்டது. இது முற்று முழுதாக விலைமனு கோரல் முறைமையை மீறிய மோசடி மிக்க கொடுக்கல் வாங்கலாகும் என்றார்.

# ஈ – கடவுச் சீட்டுக்களை வழங்க தேவையான பணிகள் தீவிரம்

ஈ - -கடவுச்சீட்டு என்ற மின்னணு கடவுச்சீட்டு வழங்கும் முறையை செயல்படுத்தத் தேவையான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு தற்போது நீக்கப்பட்டுள்ளதால், அந்த முறையை செயல்படுத்துவதில் எந்த தடையும் இல்லை என்று பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

அதன்படி, ஈ-கடவுச்சீட்டு வழங்கும் பணியைசுமார் 8 மாதங்களில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஏற்கனவே ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது, கடவுச்சீட்டு விநியோகம் வழக்கமான நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இது தொடர்பாக ஒரு மில்லியன் புதிய கடவுச்சீட்டுகளை நாட்டிற்கு கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் சுனில் வட்டகல மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில், முன்மொழியப்பட்ட 24 மணி நேர கடவுச்சீட்டு வழங்கும் முறைமை தொடர்பாக 186 குடிவரவு அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இதற்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொருத்தமான பரீட்சையை நடத்துவதற்கான திகதியை வழங்குமாறு பரீட்சைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த திகதி கிடைத்த பிறகு அதற்கான வர்த்தமானி அறிவிப்பை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் மாவட்ட தலைவர் நியமனங்கள்

ஐக்கிய மக்கள் சக்தியின் இவ்வாண்டுக்கான மாவட்டத்தலைவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்திற்கு வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது கொழும்பு மாவட்ட தலைவர் பதவி பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்ற கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அப்பதவியை தனதாக்கிக் கொண்டார். இது குறித்து கலாநிதி ஹர்ஷ, அதிருப்தியாகவே ஊடங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார். ஹர்ஷ டி சில்வாவுக்கு ஏன் கொழும்பு மாவட்ட தலைவர் பதவி வழங்கப்படவில்லை என்று ஊடகவியலாளர்கள் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கேள்வியெழுப்பினர். அதற்கான காரணத்தைக் குறிப்பிடுமாறும் மீண்டும் மீண்டும் சஜித்திடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், 'எவ்வித பிரச்சினையும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மொனராகலை மாவட்ட தலைவர், நான் கொழும்பு மாவட்ட தலைவர். ஹர்ஷ எமது அரசாங்கத்தில் நிதி அமைச்சராவார். நீங்கள் தலைப்புக்களுக்காகவும், ஊதியத்துக்காகவும் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் கேள்வியெழுப்பாதீர்கள். உங்களது ஊதியத்தை அதிகரிக்குமாறு உங்களுக்கான தொழில் வழங்குனர்களிடம் பரிந்துரைக்கின்றேன்.' என்றார்.

மாத்தளை மாவட்டத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரத்ன, அநுராதபுர மாவட்டத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார, புத்தளம் மாவட்டத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, காலி மாவட்டத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க, கம்பஹா மாவட்டத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, குருநாகல் மாவட்டத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, களுத்துறை மாவட்டத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய மாவட்டங்களுக்கான தலைவர்களும் விரைவில் நியமிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையில் திட்டமிட்ட வகையில் எழு துப்பாக்கிச்சூடுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இதில் ஒன்பதுபேர் உயிரிழந்துள்ளனர். நாட்டில் மொத்தமாக புதிய ஆண்டில் 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றுடன் தொடர்புடைய 30 பேரை நாம் கைது செய்துள்ளோம். இச்சம்பவங்களுடன் தொடர்புடைய முக்கியஸ்தர்கள் வெளிநாடுகளில் தங்கியுள்ளனர். குறிப்பாக இந்தியாவில் சிலர் தங்கியுள்ளனர் அவர்களை மீண்டும் நாட்டுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# முன்னாள் போராளி ஒருவர் உண்ணா விரத போராட்டம்

முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற வளாகத்தில் முன்னாள் போராளி ஒருவர் பத்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நீதி கிடைக்கும் வரை, சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தை வெள்ளிக்கிழமை காலை ஆரம்பித்துள்ளார்.

ஒரு காலினை இழந்த முன்னாள் போராளி அழகரெத்தினம் வனகுலராசா வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் நீர், உணவு உட்கொள்ளாமல், நீதி கிடைக்கும் வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அவர் 10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, இலங்கை மட்டுமன்றி உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும்வகையில் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அவர் முன்வைக்கும் கோரிக்கைகளாவன:



1. தமிழர்களுக்கு தனி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

2. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உடனடி தீர்வு வழங்கப்பட வேண்டும்.

3. மாவீரர் துயிலும் இல்லங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

4. தமிழினத்துரோகிகள் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும்.

5. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

6. பிரதேசவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

7. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இல்லாதவர்கள் இருந்ததாகக் கூறி, வெளிநாடு மற்றும் உள்நாட்டில் சக போராளிகளை காரணம் காட்டி, பணம் வசூலித்து, போராளிகளை ஏமாற்றி, சுற்றுலா விடுதி, தோட்டம், பண்ணை அமைத்து வேலை செய்யும் பணியாளர்களுக்கு சரியான சம்பளம் வழங்காமல் இருப்பதை நிறுத்தி, அவர்களுக்கு ஒரு மணிநேரத்துக்கு 200 ரூபா அடிப்படை சம்பளம் வழங்கப்பட வேண்டும்.


8. முதியோர் மற்றும் இளையோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

9. காணி மற்றும் வீடு இல்லாதவர்களுக்கு காணி, வீடு வழங்கப்பட வேண்டும்.

10. இலங்கையில் பிச்சை எடுப்பவர்களின் வீதம் அதிகரித்துள்ளதால், பிச்சை எடுப்பவர்கள் இல்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும்.

இந்த 10 கோரிக்கைகளை முன்வைத்தே இந்த போராளி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.








## உணவக அடிதடி தொடர்பில்:

# எதிராளியோடு சமரசம் செய்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா

நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா இராமநாதன் நபர் ஒருவரை தாக்கிய பிரச்சினை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து இரு தரப்பினரதும் சம்மதத்துடன் சமரசமாக முடித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நாடாளுமன்ற உறுப்பினரும் , சட்டத்தரணி கௌசல்யாவும் உணவருந்திக்கொண்டிருந்த வேளை அவ்விடத்திற்கு வந்த இருவர், அவர்களுடன் கதைக்க முற்பட்ட நிலையில், தர்க்கமாக மாறி கைக்கலப்பில் முடிந்தது.

கைக்கலப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் நபர் ஒருவரின் தலையில் பீங்கானால் அடித்தமையால் , அவர் தலையில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா , தனது உயிருக்கு ஆபத்து என யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதேவேளை , காயமடைந்த நபரும் தன் மீதான தாக்குதலுக்கும் பரஸ்பர முறைப்பாட்டை வழங்கி இருந்தார்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை இரவு இரு தரப்பினரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து , யாழ்ப்பாண உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் போது , இரு தரப்பினரும் சமாதானமாக செல்வதாகவும் முறைப்பாடுகளை மீளப் பெற்றுக்கொள்வதாகவும் கூறி இரு தரப்பினரும் சமரசமாக செல்வதற்கு உடன்பட்டதை அடுத்து , இரு தரப்பினருக்கும் இடையிலான பிரச்சினை பொலிஸ் நிலையத்தில் வைத்து தீர்க்கப்பட்டுள்ளது.

# மதுபானசாலையை இடமாற்றக் கோரி பூநகரி பிரதேச செயலகம் முன் மக்கள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி பூநகரி வாடியடி பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியுடன் கூடிய மதுபானசாலையை இடம் மாற்றுமாறு கோரி பிரதேசமக்கள் பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏ32 பிரதான வீதியின் வாடியடி சந்தியை அண்மித்த பகுதியில் இயங்கிவரும் விடுதியுடன் கூடிய மதுபானசாலையை இடம் மாற்றுமாறு அப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தியே இப்போராட்டத்தில் மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

அதனையடுத்து, பூநகரி பிரதேச செயலாளர் அகிலனிடம் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜர்களை போராட்டத்தில் பங்கேற்ற மக்கள் கையளித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொத்தம் பொதுவான கருத்துவேண்டாம் தெளிவான வரையறைகளே தேவை

அரசுத் தலைவர் அநுரகுமார யாழ்ப்பாணம் வந்து சென்றதைத் தொடர்ந்து தற்போது தலைமை அமைச்சர் ஹரினியும் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளார். இவர்கள் இருவரது பயணத்திலும் கவனிக்கத்தக்க ஒரு முக்கிய விடயமாக இருந்தது, அவர்கள் தமது தேர்தல் வெற்றிகளைத் தொடர்ந்து தமது அரசியல் செயற்பாடுகளை யாழ்ப்பாணத் தமிழர்கள் மத்தியில் விரிவாக்குவதில் செலுத்தும் கவனத்தை அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் செலுத்துவதில்லை என்பதுதான்.

யாழ்ப்பாணத்திற்கான தமது அண்மையப் பயணங்களின்போது அரசுத் தலைவரோ தலைமை அமைச்சரோ காணி விடுப்புக்குறித்த திடமான கால வரையறையையோ திட்டமிடலையோ, மாகாண சபைத் தேர்தலுக்கான திகதியையோ, சட்டவிரேதமாக அமைக்கப்பட்டிருக்கும் விகாரைகள் பற்றியோ, அரசியல் கைதிகளின் விடுவிப்புக் குறித்தோ எல்லாவற்றுக்கும் மேலாக புதிய அரசமைப்புக்கான பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பது குறித்தோ மூச்சுக்கூட விடுகிறார்கள் இல்லை.

அரசுத் தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் தமக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தையும் புகழையும் வடக்கில் தமிழர்கள் மத்தியில் எப்படி தமது தேசிய மக்கள் சக்திக்கான அரசியல் முதலீடாக்கிக்கொள்ளலாம் என்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பது போன்று தோன்றுகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தாம் அக்கறையோடு இருக்கிறார்கள் என்று சொல்வதால் மட்டும் தாம் தமிழர்களுக்கு சிறந்த தலைவர்களாக மாறிவிடுவோம் என்று அவர்கள் நினைத்தால் அது தவறு.

தமிழ் மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள், அன்றாடப் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள் என்று ஏராளமானவை இருந்தபோதும் அவை அனைத்தும் ஏதோ ஒரு விதத்தில் அவர்களின் அரசியல் அதிகாரத்துடன் தொடர்புபட்டவை என்பதை மறந்துவிடமுடியாது. அரசியல் தீர்வு இன்றி வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியும் என்று நினைப்பது முட்டாள்தனம். இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான வேட்கை நியாயமான வழியில் அணுகப்படாத வரையில் ஏனைய பிரச்சினைகளும் ஒரு தீர்வுக்கு வராது.

தனித்தமிழீழப்பிரகடனம் அறிவிக்கப்பட்ட வட்டுக்கோட்டைத் தொகுதியிலிருந்து தமிழ் மக்களுக்கு உரையாற்றிய தலைமை அமைச்சர் ஹரினி, அனைவருடனும் கலந்துரையாடி புதிய அரசமைப்பை உருவாக்குவது தமது ஆளும்தரப்பின் பொறுப்பு என்று தெரிவித்திருக்கிறார். அனைவருக்கும் சமத்துவமான உரிமைகள் கிடைக்கவும் அவர்களின் தனித்துவமான அடையாளங்களைப் பேணவும் வழிசமைப்போம் என்றும் தெரிவித்திருக்கிறார். இப்படிப் பொதுவாகக் கருத்துத் தெரிவிப்பதிலிருந்தே இந்த விடயங்களை எப்போது செய்வது என்பது தொடர்பில் ஆளும்தரப்பிடம் திட்டவட்டமான கொள்ளை ஏதும் இல்லை என்பது வெளிப்படுகின்றது.

இப்படி சிங்களத் தலைவர்கள் பொதுவாகக் கருத்துச் சொல்வதையும் பின்னர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் சில முயற்சிகளை எடுத்து அதை நிறைவேற்றாமலேயே பதவியலிருந்து அகல்வதையும் தமிழ் மக்கள் கடந்த 70 வருடங்களாகப் பார்த்துச் சலித்துவிட்டார்கள். எனவே இந்தப் புழித்துப்போன அணுகுமுறையை விடுத்து. தெளிவாக புதிய அரசமைப்பு ஊடான தீர்வு முயற்சி எப்போது தொடங்கப்படும் எப்போது அது இறுதி செய்யப்படும் என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும் ஆளும்தரப்பு.

# இணையம் மூலம் ரூ. 29 லட்சம் மோசடி செய்த இருவர் கைது

(சியாஸ்)

'லிட்டில் ஹார்ட்ஸ்' என்ற போலி கணக்கைத்திறந்து பரிசுத்தொகைதருவதாகக் கூறி இணையதளம் மூலம் 29 லட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிவாசல்துறை பகுதியிலும் நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரம்ப பிரதேசத்திலும் சந்தேக நபர்கள் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நொச்சியாகம, பலாவி பிரதேசங்களைச் சேர்ந்த 28 மற்றும் 23 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் இருவரும் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச வேலைகேட்டு பட்டதாரிகள் அம்பாறையில் நேற்று போராட்டம்

(பாறுக் ஷிஹான்)





அம்பாறைமாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் வேலைவாய்ப்பு கோரி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று (சனிக்கிழமை) முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டமானது அம்பாறை மாவட்டம் காரைதீவு சந்திக்கு அருகில் ஆரம்பமானதுடன் பல்வேறு சுலோகங்களை ஏந்தி பட்டதாரிகள் கொளுத்தும் வெயிலில் கவனவீர்ப்பு போராட்டத்தை அமைதியாக முன்னெடுத்தனர்.

இதன் போது இதுவரை வேலைவாய்ப்பு தொடர்பில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை எனவும் வெளிப்படையாக பட்டதாரிகளின் நிலைமை குறித்து தகவல்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இக்கவனவீர்ப்பு போராட்டமானது அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க உப தலைவர் சதாசிவம் யாதுராஜ் தலைமையில் இடம்பெற்றதுடன் குறித்த போராட்டத்திற்கு ஆதரவாக ஏனைய வேலையற்ற பட்டதாரிகள் தமது தொழில் உரிமையினை வலியுறுத்தும் வகையிலான பல்வேறு கோசங்களையும் எழுப்பி உரிய தரப்பினர் தீர்வினை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை குறித்த போராட்டத்திற்கு காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர் எஸ்.ஜெகத் வருகை தந்து பார்வையிட்டதுடன் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாடசாலையில் 'கிளீன் சிறீலங்கா'

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தின் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் முதலாம் வார நிகழ்வுகள் பாடசாலை அதிபர் டீ.கே.எம். சிராஜ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது கல்வி, கல்விசாரா பணிக்குழு மற்றும் மாணவர்கள் அனைவரும் இவ் வேலைத்திட்டம் தொடர்பான சத்திய பிரமாணத்தை மேற்கொண்டிருந்தனர்.

இவ் வேலைத்திட்டம் தொடர்பாக மாணவர்களுக்கும் கல்வி மற்றும் கல்வி சாரா பணி குழுவினருக்கும் தெளிவு படுத்தும் நிகழ்வுகள் பிரதி அதிபர் எம்.ஏ.எம். சிராஜால் மேற்கொள்ளப்பட்டதோடு பாடசாலை மட்ட கிளீன் சிறிலங்கா வழிப்படுத்தல் குழுவினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் சிரேஷ்ட மாணவர்கள் தலைமையில் பாடசாலை சுகாதார மேம்பாட்டுக்காக மாணவர்கள் சார்பாக செயற்குழு ஆரம்பிக்கப்பட்டு பொறுப்புக்கள் வழங்கி வைக்கப்பட்டன.

செயல்களை முன்னெடுப்போம் - பொறுப்புடன் செயற்படுவோம் தொனிபொருளினாலான வீடியோ காட்சிகளும் சிமாட் போட் துணையுடன் காட்சிப்படுத்தப்பட்டது. நாளாந்த சுகாதார மற்றும் சுத்தப்படுத்தல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய மேற்பார்வைக் குழு நியமிக்கப்பட்டது.

# செயலமர்வு

(சியாஜ்)

புத்தளத்தில் உள்ள அஹதிய்யா பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விஷேட செயலமர்வு முஸ்லிம் சமய பண்பாட்டலுவலக திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று (சனிக்கிழமை) புத்தளம் முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் திணைக்களத்தின் புத்தளம் கலாசார உத்தியோகத்தர் ஏ.எம்.எம் இப்ஹாம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட், புத்தளம் மாவட்ட அஹதிய்யா சம்மேளனத் தலைவர் எம்.எம்.எம்.றியாஸ், செயலாளர் பாறூக் பதீன் மற்றும் உளவளத்துணை ஆலோசகர் மற்றும் மாணவர், பெற்றோர்களின் பயிற்சியாளர் எம்.என்.என்.எம். றமீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தலைமைத்துவம் தொடர்பாகவும் அதில் முகாமையாளர் என்பவருக்கும் தலைவர் என்பவருக்கும் இடையிலான தொடர்புகள் வேறுபாடுகள் என்பன பற்றிய விரிவுரைகளை வளவாளர் எம்.எஸ் அலா அஹமட் மற்றும் போதைப் பாவனை தொடர்பாகவும் அதில் இருந்து நாம் எம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளவது போதைப் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய விரிவுரையை உளவளதுணை ஆலோசகர் எம்.என்.என்.எம் றமீஸ் ஆகியோர் வளங்கியமை குறிப்பிடத்தக்கது.





# வாழ்க்கை மாற்றத்திற்கான உளவளதுனை இலவசப் பயிற்சிப் பட்டறை கற்பிட்டியில்

(சியாஜ்)

கற்பிட்டியில் முதன் முறையாக வாழ்க்கை மாற்றத்திற்கான ஒரு நாள் உளவள ஆலோசனை இலவச பயிற்சிப் பட்டறை ஒன்று கற்பிட்டி செடோ நெனசலவின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் (செவ்வாய்க்கிழமை) காலை 09 மணி தொடக்கம் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

உளவியல் என்பதன் முக்கியத்துவம், வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் தனிநபர் மற்றும் குடும்ப ஆலோசனைகள், குழந்தைகள் மற்றும் சமூக உளவியல் சேவைகள் என்பன பற்றி பயிற்சி பட்டறையில் தெளிவூட்டல்களை கற்பிட்டி பிரதேச செயலக சமூக வலுவூட்டல் அமைச்சின் புத்தளம் மாவட்ட உளவளதுனை அமைப்பாளர் எச்.எம் நிப்ராஸ் வழங்க உள்ளார் என செடோ நெனசலவின் உளவளத்துனை பயிற்சி இணைப்பாளர் எம்.ஆர்.எப் சிப்கா தெரிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு: 076 708 4244, 071 330 5321 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கு பல்கலையில் தலைமைத்துவப் பயிற்சி!

(நூருல் ஹுதா உமர்)



கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதிகளும் மாணவத் தலைவர்களும் கலந்து கொண்ட தலைமைத்துவப் பயிற்சி பட்டறை நேற்று (சனிக்கிழமை) தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இதில் வளவாளர்களாக தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம். ரிபாயுதீன், சமூகவியல்துறைப் பேராசிரியர் எஸ்.எம் அய்யூப் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான தலைமைத்துவ ஆளுமை விருத்தி தொடர்பாக விரிவுரையாற்றினர்.



இந்நிகழ்வில் பல்கலைக்கழக நூலக வசதிகள் தொடர்பாக சி.எம்.ஏ. முனாஸால் தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேலும் பல்கலைக்கழக விளையாட்டுத்துறைபணிப்பாளர் ஐ.எம்.கடாபியால் பல்கலைக்கழகத்தினுள் நடைமுறைப் படுத்தப்படும் விளையாட்டுத்துறை தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன.



# ‘கற்பகம்’ விற்பனை நிலையமூடாக உள்ளூர் உற்பத்தியாளர்களுடைய வாழ்வு மேம்படும்

## பனை அபிவிருத்திச் சபை தலைவர் தெரிவிப்பு

(சுபேசன்)

’கற்பகம்’ விற்பனை நிலையங்கள் ஊடாக உள்ளூர் உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரம் உயரும் எனப் பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.



கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம்-ஆரிய குளம் பகுதியில் கற்பகம் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்ட நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

தொழிற்துறைத் திணைக்களத்திற்குச் சொந்தமான இடத்தில் அவர்களுடன் இணைந்து பனை அபிவிருத்திச்சபையானது ’கற்பகம்’ பனை சார்ந்த மற்றும் உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை நிலையம் புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அரச உடைமைகளை வினைத்திறனாகப் பயன்படுத்தும் விதமாக தொழிற் திணைக்களம் மற்றும் பனை அபிவிருத்திச் சபை ஆகிய இரு திணைக்களங்களும் இணைந்து இந்த செயற்பாட்டை முன்னெடுத்துள்ளன.

இதனூடாக அரச வளங்களை உச்சக்கட்ட பயன்பாட்டிற்கு உட்படுத்தி வருவாயைப் பெற முடியும். மேலும் கற்பகம் விற்பனை நிலையம் ஊடாக ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தலை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு சிறந்த வருமானத்தை ஏற்படுத்திக்கொடுக்க முடியும். - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# வவுனியாவில் ஆக்கிரமிக்கப்படும் விவசாயச் செய்கை நிலங்கள்

வவுனியாவில் ஏ9 வீதியை மையமாக கொண்டு பல விவசாய நிலங்கள் மண் போட்டு நிரப்பட்டு ஆக்கிரமிக்கபடுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறிப்பாக வவுனியா, நொச்சிமோட்டை, தாண்டிக்குளம், யாழ் வீதி, பட்டாணிச்சூர் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய காணிகளில் மண் போட்டு அவற்றை நிரவி புதிதாக வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள் என்பவற்றை அமைக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இது தொடர்பில் ஊடகங்களில் பல தடவை வெளிவந்துள்ளதுடன், விவசாயிகளும் கமநல அபிவிருத்தி திணைக்களத்திடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கபடவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.விமலரூபனிடம் கேட்ட போது -

எமக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ் வீதியில் விவசாய காணியில் கிரவல் போட்டு நிரப்பும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இதனை நிறுத்தி உடனடியாக கிரவலை அகற்றுமாறு அறிவுறுத்தியுள்ளோம். தாண்டிக்குளம், பட்டாணிச்சூர் ஆகிய பகுதிகளிலும் குறித்த செயற்பாட்டை இடைநிறுத்துமாறு எமது திணைக்களத்தால் நோட்டீஸ் முதல் கட்டமாக ஒட்டப்பட்டுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடரும். ஏனைய இடங்களிலும் இவ்வாறு நடந்தால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். 100

# ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட தலைவராக இம்ரான் எம்.பி. தெரிவு

(ஹஸ்பர்).

ஐக்கிய மக்கள் சக்தியின் மூதூர் தொகுதி அமைப்பாளராகவும் திருகோணமலை



மாவட்ட தலைவராகவும் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவினால் வெள்ளிக்கிழமை குறித்த நியமனம் வழங்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.






# பரிசளிப்பு

(சியாஜ்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளை சர்வதேச அரபு மொழி தினத்ததை முன்னிட்டு புத்தளம் மாவட்டத்தை மையப்படுத்தி அரபு எழுத்தணி போட்டி நிகழ்ச்சி ஒன்றை அண்மையில் நடத்தி இருந்தது.

அரபு மொழியின் அழகு, எழுத்தணியின் பாரம்பரியம் மற்றும் இதில் போட்டியாளர்களின் திறமைகளைப் பாராட்டுவதற்கான பரிசளிப்பு என்பன புத்தளம் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த இந்த போட்டியில் மூன்று பிரிவுகளாக 387 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 10 இடங்களைப் பெற்றுக் கொண்ட வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் நினைவுச்சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக அஷ்ஷெய்க் எச். அப்துல் நாசர் (ரஹ்மானி) கலந்து கொண்டு அரபு எழுத்தணியின் முக்கியத்துவம் எனும் தொனிப்பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார்.







# பதுக்கப்பட்ட கீரி சம்பா அரிசி அதிகாரிகளிடம் மாட்டியது

அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக கிட்டத்தட்ட 4750 கிலோ கிராம் கீரி சம்பாவை மறைத்து வைத்திருந்த விற்பனையாளரை நுகர்வோர் விவகார அதிகாரசபை கண்டுபிடித்துள்ளது.

கொழும்பு 12இல் உள்ள ஒரு கிடங்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அரிசித் தொகை, நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகளால் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்கு மாகாண பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இந்த அரிசி மற்றும் பொருட்களை மறைத்து வைத்த தொழிலதிபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எம்.பி. ஆதரவாளர்களுடன் கலந்தாய்வு

(தில்சாத் பர்வீஸ்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர் தலைமையில் வியாழக்கிழமை ஆதரவாளர்கள் மற்றும் கட்சி முக்கியஸ்தர்களுனான கலந்துரையாடல் நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயற்பாடுகள் மற்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் செயற்பாடுகள் தொடர்பில் அக்கட்சியின் நிந்தவூர் பிரதேச முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றதுடன், கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் கட்சியின் அரசியல் நிலைப்பாடுகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள்நலன்சார் செயற்பாடுகள் மற்றும் நாடாளுமன்ற உரைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், நிந்தவூர்



பிரதேச கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# மண்ணகழ்வை அனுமதிக்ககோரி மூதூரில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(ஹலால்தீன்)

மூதூர் பிரதேசசெயலாளர்கள் பிரிவுக்கு உட்பட்ட இறால்குழி பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியின் அருகில், இறால் குழி பிரதேச மக்களால் இவ்வார்ப் பாட்டம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்களின் பிரதான தொழில் மண் அகழ்வதாகும், தற்பொழுது இந்த மண் அகழ்வு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் இறால் குழி பிரதேச மக்களின் வாழ்வாதாரம் முற்று முழுதாக பாதிக்கப்பட்டது.

இத்தொழிலை மீண்டும் அனுமதிக்க கோரியே இவ் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 60 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.





## மன்னாரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் சூழ்நிலையில் அதானியுடைய காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை அதானி நிறுவனம் பின்வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் ஆளும்தரப்பு இதுகுறித்து எதிர்வரும் வாரம் பேச்சு நடத்த உள்ளதாகவும் அறிகிறோம்.

மின்சாரத்தை கொள்வனவு செய்வதில் விலை நிர்ணயத்தில் ஏற்பட்ட முரண்பாடு, அத்திட்டத்தை மீளாய்வு செய்ய அரசு குழு ஒன்றை நியமித்திருந்த சூழ்நிலையிலே அதானிகுழுவினரால்இவ்வாறானஅறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முழுமையாக இத்திட்டத்தில் இருந்து அவர்கள் வெளியேறுவார்களா? அல்லது எதிர்வரும் வாரம் இடம்பெற உள்ள பேச்சுடன் அவர்கள் மீண்டும் இணங்கி போவார்களா? என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது. எனவே மன்னார் தீவில் அவர்கள் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை அமுல் படுத்தக்கூடாது என்பதே எமது தொடர்ச்சியாக கோரிக்கையும், ஜனநாயக போராட்டமுமாக அமைந்துள்ளது.

மக்களின் அடிப்படை இருப்பையும், உணர்வையும், புரிந்து கொண்டு அவர்கள் மன்னார் தீவில் இருந்து வெளியேற வேண்டும். அவர்கள் வெளியேறுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

### கனிய மணல் அகழ்வு

இரண்டுதடவைகள்கனியமணல்அகழ்வு குறித்து மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்கள் களப்பயணத்தை மேற்கொண்டு கனிய மணல் அகழ்வுக்கான சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையை வழங்க கள விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்திருந்த போது மக்களின் எதிர்ப்பு காரணமாக குறித்த இரு தடவைகள்அவர்களினால்நடைமுறைப்படுத்த முடியவில்லை.

அவர்கள் மீண்டும் களப்பயணம் மேற்கொள்ள பாதுகாப்புக் கோரியுள்ளனர். பாதுகாப்புடன்சென்றுகளஆய்வுமேற்கொள்ள அவர்கள் பாதுகாப்பை கோரியுள்ளனர். நீதிமன்றத்தின் ஊடாக அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறிகின்றோம்.

திங்கட்கிழமை அவர்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளைமேற்கொண்டுபுதன்கிழமை மன்னாரிற்கு 23 திணைக்களங்களும் வந்து கள ஆய்வு முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக அறிகின்றோம். எனவே கனிய மணல் அகழ்வுக்கான கள ஆய்வில் ஈடுபட அவர்கள் வருகை தரக் கூடாது. மக்களின் விருப்பம் இன்றி அவர்கள் குறித்த நடவடிக்கையை முன்னெடுக்கக்கூடாது.

மன்னாரில் கடந்த ஒரு மாதத்திற்கு முன் மழை விட்டும் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பல்வேறு விதமான சுற்றுச்சூழல் தாக்கத்தையும் சமூக இருப்புக்கான கேள்விக் குறியையும், மக்கள் வாழ்விடங்களில் இருக்க முடியாத ஒரு நிலைப்பாடும் காணப்படுகின்ற மையினால் இந்த பகுதியில் மண் அகழ்வு செய்யக் கூடாது என்கிற மக்களினுடைய போராட்டத்தை மதித்து அவர்களுடைய உணர்வுகளுக்கு செவி சாய்த்து இத்திட்டத்தில் இருந்து அவர்களும் வெளியேறவேண்டும்.

இவ்வாறு இன்றி அடாத்தாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அவர்கள் வருவர்களாக இருந்தால் மன்னார் மக்கள் ஒருபோதும் அதனை அனுமதிக்க மாட்டார்கள். அதற்கு எதிராக மாவட்டம் தழுவிய ரீதியில் பெரும் ஜனநாயகப் போராட்டத்தை மக்கள் முன்னெடுப்பார்கள். எனவே அரசு இந்த மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு, இத்திட்டங்களில் இருந்து அவர்கள் வெளியேறவேண்டும். மேலும் கரையேற மணல் அகழ்வு செயல் திட்டத்தையும் அரசு கைவிட வேண்டும்.

இந்த மூன்று திட்டங்களையும் மன்னார் தீவுப் பகுதியில் இருந்து அவர்கள் கைவிட்டு, வெளியேறி மக்களின் வாழ்வியல் இருப்புக்கும், வாழ்வியல் சுகாதார சுற்றுச் சூழல் பாதிப்புக்களின் இருந்து அவர்களை பாதுகாத்துக் கொள்ளும் நிலைப்பாட்டிற்கு அரசு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என மன்னார் மக்கள் சார்பில் நாங்கள் இந்த கோரிக்கையை விடுக்கின்றோம் என்றனர்.

இந்த செய்தியாளர்கள் சந்திப்பில் சந்திப்பில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ், மீனவ சங்கப் பிரதி நிதி ஆலம், மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சிவகரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.

## புலனாய்வாளர்களால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்தல் விடுக்கக்கூடாது. புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்துவது அந்தக் காலத்தில் இருந்தது. அவர்களுக்கு போராடுவதற்கு உரிமை உள்ளது. போராடுவதற்கு புலனாய்வு பிரிவினர் அச்சுறுத்தல் விடுப்பதில்லை. அப்படி அச்சுறுத்தல் விடுப்பார்களாக இருந்தால் அது குறித்து எங்களுக்கு தெரியப்படுத்துங்கள், நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

இதுவரை நாட்களும் இந்தப் பட்டதாரிகள் எங்களுடன் பேச்சு நடத்தினார்களா? விளையாட்டாக செயல்படுபவர்களிடம் நீங்கள் இதுகுறித்து கதைக்காதீர்கள். நாங்கள் உங்களது பிரச்சினைகள் குறித்து நிச்சயமாக உள்வாங்கி செயற்படுவோம் - என்றார்

## இளங்குமரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி.ஹரிணி அமரசூரிய நேரில் சென்று பார்வையிட்டார். நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதியும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற வருகின்றார்.

## வெப்பத்தால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, தினமும் குளிப்பதும், இளம் குழந்தைகளை காலையிலும் மாலையிலும் 20 நிமிடங்கள் தண்ணீரில் வைத்திருப்பதும் இந்த நோய்களிலிருந்து பாதுகாக்க உதவும்.

வெப்பமான காலநிலையில் வயிற்றுப் போக்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும், காய்ச்சல், வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் வயிற்றுப்போக்கில் காணப்படுவதாகவும், சில சந்தர்ப்பங்களில், வயிற்றுப்போக்குடன் இரத்தம் வெளியேறினால், அது வயிற்றுப்போக்காக இருக்கலாம் என்றும் சிறப்பு மருத்துவர் கூறுகிறார்.

இளம் குழந்தைகளுக்கு வெப்பமான வானிலை கடினமாக இருக்கும் என்றும், தலைவலி, பசியின்மை, தூக்கமின்மை, அதிக தூக்கம், வாந்தி, வழக்கத்தை விட அதிக சோர்வாக உணர்தல் மற்றும் நீரிழப்பு போன்ற நிலைமைகளை அவர்கள் அனுபவிக்கக்கூடும் என்றும் சிறப்பு மருத்துவர் கூறுகிறார்.

வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்தால், நீரிழப்பு, வெப்ப பக்கவாதம், வயிற்றுப்போக்கு மற்றும் வயிற்றுப்போக்கு அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் வழக்கத்தை விட அதிகமாக சுத்தமான தண்ணீரை குடிக்கவும், தினமும் குளிக்கவும், எளிய பருத்தி ஆடைகளை அணியப் பழகவும், அன்றாட பழக்கவழக்கங்களில் திரவங்களைச் சேர்க்கவும் சிறப்பு மருத்துவர் அறிவுறுத்துகிறார்.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமரத்ன வெள்ளிக்கிழமை (14) கூடிய விசேட சபை அமர்வில் வாசித்தார்.

சட்டமூலம் முழுமையாகவும், மற்றும் குறிப்பாக 2 மற்றும் 3 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதால், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க விசேட பெரும்பான்மையின் ஊடாக நிறைவேற்றப்படவேண்டும் என்று நீதியரசர்கள் குழாமில் பெரும்பான்மையினராகிய இரண்டு நீதியரசர்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

நீதியரசர் குழாமில் மீதமுள்ள ஒரு நீதியரசர், சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் முரண்படவில்லையென்பதால் அதனைப் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையொன்றினால் நிறைவேற்ற முடியும் என தீர்ப்பளித்துள்ளார்.

இதற்கமைவாக சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் திங்கட்கிழமை நடைபெறுவதுடன், சட்டமூலத்தை அன்றைய தினமே வாக்கெடுப்புடன் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வாக்கெடுப்புடன் நிறைவேற்றப்படும் சட்டமூலத்தை சபாநாயகர் நாளை செவ்வாய்க்கிழமை சான்றுரைப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டமூலத்துக்கு, பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் ஆலோசனை குழு அங்கீகாரமளித்துள்ளது.

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம், சட்டமாக்கப்பட்டு 14 நாட்களுக்கு பின்னர் வேட்புமனுக் கோரலுக்கான திகதி அறிவிக்கப்பட வேண்டும்.

## யானையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிகொத்தாவில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மற்றைய உள்ளூராட்சி அமைப்புகளுக்கு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றைய கட்சிகளுடன் கூட்டணி வைத்து பொருத்தமான சின்னத்தின் கீழ் போட்டியிட திட்டமிட்டுள்ளது.

இம்மாதம் 20 ஆம் திகிதிக்கு முன்னர் இது தொடர்பான முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# பிளாஸ்டிக் பொலிதீனற்ற கிளீன் சிறீலங்கா சூழலை உருவாக்கும் விழிப்புணர்வு நிகழ்வு

## கிண்ணியாவில் நடந்தது

(ஹலால்தீன்)

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் கிண்ணியா நகர சபையின்ஏற்பாட்டில் பிளாஸ்டிக் மற்றும்பொலிதீன்அற்றசுற்றுப்புற சூழலைஉருவாக்கும்நோக்குடன் விழிப்புணர்வூட்டல் நிகழ்வு றகுமானியா நகர் கிராம சேவகர் பிரிவில் வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

நகர சபையின் செயலாளர் எம்.கே.எம்.அனீஸ் தலைமையிலான குழுவினர் முன்னெடுத்தனர்.

கிண்ணியா நகர சபை பிரிவில் உக்காத பிளாஸ்டிக்

மற்றும் பொலிதீன் கழிவுப் பொருளை அகற்றிதூய்மையான சுழலை ஏற்படுத்துவதே இவ்விழிப்புணர்வூட்டல்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும் என நகர சபை தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வீடாகச் சென்று திண்ம கழிவகற்றுவதற்கான 150 பைகளும், துண்டுப் பிரசுரங்களும் அறிவுறுத்தல்களும் பொது மக்களுக்கு இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிண்ணியா நகர சபையின் செயலாளர்,அதன் உத்தியோகத்தர்கள், கிண்ணியா மக்கள் பேரவை நிறைவேற்றுச் செயலாளர் எம்.எம்.அப்துல் ஜவாத், சமூக மேம்பாட்டு அமைப்பின் தலைவர் ஏ.யூ.அலாப்தீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.








# செயலமர்வு

(பாறுக் ஷிஹான்)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் எஸ்.ஈ.டி.ஆர். செயற்திட்ட நிதிப் பங்களிப்புடன் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பான மூன்று நாள் பயிற்சி செயல் அமர்வு சம்மாந்துறை கமு/ஃசது/ஃமுஸ்லிம் மத்திய மஹா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) நடைபெற்றது.

இந்நிகழ்வானது சம்மாந்துறை பிரதேச செயலக மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.றினோசா ஒருங்கிணைப்பில் அப்பாடசாலையின் அதிபர் எம். டி. முஹம்மட் ஜனூபர் தலைமையில் பெப்ரவரி 10,11,13 ஆம் திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மட் ஹனீபா கலந்து கொண்டதோடு வளவாளர்களாக நாவிதன் வெளி பிரதேச செயலக மத்தியஸ்த உத்தியோகத்தர் ஐ.எல்.எம்.அன்பாஸ் மற்றும் ஆலயடிவேம்பு பிரதேச செயலக மத்தியஸ்த உத்தியோகத்தர் வீ.லாவன்யா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் இப்பாடசாலையின் பாடசாலை மத்தியஸ்த அலகுற்கு பொறுப்பான ஆசிரியர்களும் கலந்து கொண்டதுடன் இப் பாடசாலையில் தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு அது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இப் பயிற்சி செயலமர்வின் மூலம் மாணவர்களுக்குமுரண்பாடு,தொடர்பாடல், கலந்துரையாடல் போன்ற விடயங்கள் மூலம் மத்தியஸ்தம் செய்யும் முறைகள் தொடர்பாககூறப்பட்டதுடன்மத்தியஸ்தம் செய்யும்பிரயோகரீதியான அறிவினையும் பெற்றுக் கொண்டனர். மேலும் இப் பாடசாலையில் பாடசாலை மத்தியஸ்த அலகும் நிறுவப்பட்டது.

# சுற்றாடல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண 'வட்ஸ்அப்' இல.

சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவில் கண்டறிவதற்காக புதிய வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகசுற்றாடல்அமைச்சு தெரிவிக்கின்றது.

சுற்றாடலை பாதுகாப்பதற்காக பொதுமக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

076 641 20 29 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளை குறுஞ்செய்திகளாக அனுப்ப முடியும்.

அவ்வாறு கிடைக்கும் குறுஞ்செய்திகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி உடனடி மற்றும் நிலையான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவும் அவற்றை தொடர்ச்சியான செயன்முறையின் ஊடாக ஆய்வுகளுக்கு உட்படுத்தவும் எதிர்பார்ப்பதாக சுற்றாடல் அமைச்சு கூறுகின்றது.

திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 7 மணியிலிருந்து இரவு 7 மணி வரையான இந்த வட்ஸ்அப் இலக்கத்தின் ஊடாக சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளை முன்வைக்க முடியும் எனவும் சுற்றாடல் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

# கல்விப் பணிப்பாளர் பதவிகள் 3 மாகாணங்களில் வெற்றிடம்

3 மாகாணங்களில் கல்விப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்கு, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் இந்தப் பதவி வெற்றிடமாக இருப்பதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் 1 இல் 5 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட மற்றும் அனைத்து தகைமைகளையும் கொண்ட நபர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது

# கிழக்கு மாகாணத்துக்கு புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியேற்பு

(பாறுக் ஷிஹான்)

கிழக்குமாகாணபுதியசிரேஸ்டபிரதி பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றுள்ள சட்டத்தரணி வருண ஜெயசுந்தர மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதிபொலிஸ்மாஅதிபர்பணிமனையில் வெள்ளிக்கிழமை கடமைகளை பொறுப்பேற்றார்.

மட்டக்களப்பு,அம்பாறை,திருகோணமலை, கந்தளாய் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான சீரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட மாகாண உயர்பொலிஸ் அதிகாரிகள் அடங்லாக சர்வமத தலைவர்களும் கலந்துகொண்டனர்.

பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையையும் புதிய சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஏற்றுக்கொண்டார்.



புதிய சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர்காத்தல் தொடர்பான அடிப்படை கற்கை நெறி

(இல்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பயிற்சி நெறியில் பங்கு பற்றும் மாணவர்களுக்கு மேலங்கி வழங்கி வைக்கப்பட்டதுன், மேற்படி பயிற்சி நெறி தொடர்பான தெளிவுட்டல் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல். ஹனீபா, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ், கல்முனை சுகாதார அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் டாக்டர் அஜ்வத், காரைதீவு, சம்மாந்துறைபிரதேச சபைசெயலாளர்கள், இராணுவம் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் செயலாளர் ஐ.எல்.எம். முஸ்தபா என பலரும் கலந்து கொண்டனர்.









# வடக்கு மாகாண இளையோருக்கு வெளிநாட்டு ஆசைகாட்டி பெருந்தொகைப் பணம் மோசடி

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக ஆசை வார்த்தைகளை கூறி இளையோரை ஏமாற்றி பணம் பறிக்கும் சம்பவங்கள் வடக்கில் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமான முறைகளில் ஆட்கடத்தல்களில் ஈடுபடும் முகவர்கள் இளையோரை இலக்கு வைத்து , அவர்களை சமூக ஊடகங்கள் ஊடாக அணுகி, ஆசை வார்த்தைகளைக் கூறி பெருந்தொகையான பணத்தினை பெற்று மோசடி செய்து வருகின்றனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் , மானிப்பாய் , கிளிநொச்சி உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வெளிநாடு செல்வதற்கு வங்கி கணக்கில் பெருந்தொகை பணம் இருப்பில் இருக்க வேண்டும் எனக் கூறி , வங்கி கணக்கு இலக்கங்களைப் பெற்று , அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை பெற்று , வங்கியில் உள்ள பணத்தினை மோசடியாக கும்பல் பெற்றுக்கொண்டு தலைமறைவாகி வருகிறது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கபெற்றள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வெளிநாடு செல்ல காத்திருக்கும் இளையோர் , வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு முகவர்கள் ஊடாக பயண ஏற்பாடுகளை செய்து சட்ட ரீதியான முறையில் செல்ல வேண்டும்.

இது தொடர்பில் இளையோர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டாலே இவ்வாறான மோசடி சம்பவங்களில் இருந்து அவர்கள் தப்பிக்கொள்ள முடியும். இல்லையெனில் பெருந்தொகை பணத்தினை இழக்க நேரிடும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# மண்ணைக் காதலித்ததால் காதலர் தினத்தில் விடுதலை

## வேலன் சுவாமிகள் தெரிவிப்பு

மண்ணை காதலித்ததால் காதலர் தினத்தன்று விடுவிக்கப்பட்டோம் என வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார். வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய சுதந்திர தின எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்கான வழக்கு கிடப்பில் போடப்பட்ட நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த போராட்டம் கடந்த 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் முன்பாக ஆரம்பமாகியிருந்தது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டமை தொடர்பில் 2023 ஒகஸ்ட் மாதம் வேலன் சுவாமிகள், எம்கே.சிவாஜிலிங்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட 10 பேருக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸாரால் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கானது நீண்டகாலமாக தவணையிடப்பட்டு வந்த நிலையில் வெள்ளிக்கிழமை வழக்கானது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் கிளிநொச்சி சட்டத்தரணிகள் பிரதிவாதிகள் சார்பில் ஆயராகினர்.

இந்த நிலையில் குறித்த வழக்கானது நீதிவானால் கிடப்பில் போடப்பட்டது. குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே வேலன் சுவாமிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வழக்கானது இன்றைய தினம் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றது. எத்தனை வழக்குகள் வந்தாலும் இந்த மண் மீதான காதல் மாறாது. எங்கள் உயிர் இருக்கும் வரை இந்த மண் மீதான காதலும், இன விடுதலையும் அதற்கான போராட்டமும் எப்பொழுதும் தொடரும் என அவர் தெரிவித்தார்.

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி போராட்டத்தில் பங்குபற்றியமைக்கான வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. கிளிநொச்சி சட்டத்தரணிகள் எமது சார்பில் ஆயராகி இருந்தார்கள்.



கிட்டத்தட்ட 2 வருடங்களாக இடம்பெற்ற இந்த வழக்கு கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது. எங்களது ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாங்கள் செய்யும் போராட்டங்கள் மீது சிறிலங்கா அரசின் உத்தரவின் பெயரில் சிறிலங்கா பொலிஸார் அவ்வப்போது பொய் வழக்குகளை போட்டு துன்புறுத்துவதும், அச்சுறுத்துவதும் மிகவும் கண்டிக்க வேண்டிய விடயமாக இருக்கின்றது எனவும் வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம்

(பாறுக் ஷிஹான்)

அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்தி குழுத் தலைவரும் அரசியல் பேரவை உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ரி.எம்.எம். அன்சார் நெறிப்படுத்தலின் கீழ் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை,அக்கரைப்பற்று பிரதேச தேசிய மக்கள் சக்தி அமைப்பாளர் ரமீஸ் முஹைதீன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் ,சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.02.2025இல் வெளியிடப்பெற்றது